13.03.2026

O.S.No. 42/2023

**PW1– ஷகீலா பீவி– க/பெ. செய்யது மசூது**

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.03.2026

**நீதிமன்ற கேள்வி –**

1. எனது கணவருக்கு 2 திருமணம் என்றால் சரிதான். எனக்கு முதல் மனைவி பெயர் தெரியாது. எனது கணவருக்கும் அவரது முதல் மனைவிக்கும் திருமணம் மூலம் 2 குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களின் பெயர் ஜெசிமாள் பேகம், ஜஸிமா பேகம் என்றால் சரிதான். அவர்களை ஏன் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவர்களிடம் எனது 2 மகன்களும் கேட்டபோது, முதல் மனைவியின் 2 குழந்தைகளும் தங்களுக்கு வாரிசு சான்றிதழ் வேண்டாமென்று கூறிவிட்டனர். எனவே அவர்களை கட்சி சேர்க்கவில்லை. ஆனால் இஸ்லாமிய மார்க்கத்தின்படி முதல் மனைவிக்கும், முதல் மனைவியின் குழந்தைகளுக்கும் சட்டப்படி உரிமை உண்டு என்றால் சரிதான். 2 குழந்தைகளுக்கும் திருமணமாகிவிட்டது. திருமண செலவு தொகையை நாங்கள்தான் கொடுத்தோம். எனது கணவர் விபத்து ஏற்பட்டபோதும் நான் தான் பார்த்துக்கொண்டேன், முதல் மனைவியின் வாரிசுகள் பார்க்கவில்லை. அவர்களும் எனது கணவருக்கு வாரிசுகள் என்றால் சரியல்ல. அவர்களும் வாரிசு என்றால் எனக்கு வாரிசு சான்றிதழே வேண்டாம்.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

District Munsif, Shenkottai